## ஞாலகுருவின் படைப்புக்கள்

# பதினெண்சித்தர் பூசைமொழிகள்

ஓம் குருவே போற்றி! ஓம் குரு குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)


மெய்யான இந்துமத ஆண்டு 43,73,121 ஆடி மாதம்.

**இந்து இலக்கியக் கழக வெளியீடு**

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

1. **"அட்டைப்பட அறிமுகம்"** - இந்துமதத் தந்தை, குருதேவர் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறூர் அவர்களுக்கு ஓர் அறிமுகம்.

2. **"பதிப்புரை"** - பதினெண்சித்தர் பூசைமொழிகள் புத்தகம் பதிப்பிக்கப்பட்டதற்கு எழுதப்பட்ட பதிப்புரை.

3. **"முன்னுரை"** - ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறூர் அவர்கள் குருபீடமாக இருந்து பூசைமொழிகளை வழங்கிடுவதற்கு அளித்த முன்னுரை.

4. **"அறிமுகவுரை"** - இந்து மறுமலர்ச்சி இயக்கப் பொறுப்பாளராக இருந்த பிறமாச்சாரியார் அவர்கள் பூசைமொழிகள் புத்தகத்திற்கு எழுதிய அறிமுகவுரை.

5. **"பின்னுரை"** - அச்சிடப்பட்ட பூசைமொழிகளுக்குப் பின் இறுதியில் குருதேவர் வழங்கியிருக்கும் உரை.

6. "**இந்து மறுமலர்ச்சி இயக்க முழக்கங்கள்**" - உலகம் முழுவதற்கும் அழைப்பு விடுக்கும் வாசகங்கள்.

7. **"தெய்வீக மருத்துவம் - ஒரு மடல்!"** - 1969இல் 'முதல் சித்தன்' என்ற பெயரில் வெளிவந்த சித்த மருத்துவ மாத இதழில் குருதேவர் எழுதிய கட்டுரை.

# அட்டைப்பட அறிமுகம்

(1) அட்டைப்படத்தில் இருப்பவர்தான் இந்த மண்ணுலகம் தோன்றிய ஐநூறு (500) கோடி ஆண்டுக்கால வரலாற்றில் அருளாட்சியை நிலைநாட்டுவதற்காகத் தோன்றிய பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாவார். இவருக்குப் பிறகு மீண்டும் அருளாட்சியை நிலைநாட்ட முப்பத்தாறு (36) பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றுவார்கள் என்பதே மெய்யான இந்துமத வரலாற்றின் முழுமை.

ஏனெனில் வழிபடு நிலையினர்கள், இம்மண்ணுலக சித்தர்கள், அருட்பட்டத்தவர்கள், அருளாளர்கள், அருளாளிகள், அருளாடு நாயகங்கள், மருளாளர்கள், மருளாளிகள், மருளாடு நாயகங்கள், சங்கராச்சாரியார்கள், ஆதிசங்கராச்சாரியார்கள், சிவாச்சாரியார்கள், ஆதிசிவாச்சாரியார்கள், பரமாச்சாரியார்கள், ஆதிபரமாச்சாரியார்கள், ஈசுவராச்சாரியார்கள், ஆதிஈசுவராச்சாரியார்கள், புத்தர்கள், மகாவீரர்கள், தேவகுமாரர்கள், தேவதூதர்கள், பத்தியார்கள், சத்தியார்கள், சித்தியார்கள், முத்தியார்கள், பதினெண்சித்தர் பீடாதிபதி வழி ஆச்சாரியார்கள்,.... முதலிய அருளுலக நிலையினரின் வகைகளில் ஒவ்வொரு வகையிலும் (48) நாற்பத்தெட்டுப் பேர்கள் தோன்றுவார்கள்.... என்ற சட்டதிட்டத்தை வைத்துத்தான் மெய்யான இந்துமதத்தை உருவாக்கினர்கள் பதினெண்சித்தர்கள். இந்தப் பேருண்மையை முறையாகவும் நிறையாகவும் புரிந்து கொள்வதைப் பொறுத்துத்தான் இந்து மதத்தின் மலர்ச்சியும், வளர்ச்சியும், ஆட்சிமீட்சியும் அமைந்துள்ளது.

(2) கால வேகங்களாலும், கருத்து மாற்றங்களாலும், மானுட இனப் போராட்டங்களாலும்,.... மெய்யான இந்துமதத்தின் ஏட்டறிவிலும், பட்டறிவிலும் ஏற்பட்டுவிடக் கூடிய தேய்நிலைகளையும், நோய்நிலைகளையும், பேய்நிலைகளையும் ஆய்வு செய்து அகற்றி மெய்யான இந்துமதத்தைத்

தூய்மையும், வாய்மையும், துய்ப்பு நிலையும் பெறுமாறு செய்வதற்காகத் தூண்டுபவர்களே பதினெண்சித்தர் பீடாதிபதிகள்.

இவர்களே குரு பாரம்பரியம் (The Religious History), அரச பாரம்பரியம் (The Political History), இலக்கிய பாரம்பரியம் (The Social History and the History of Language and Literature) என்ற மூன்று பெரும் வரலாற்றுத் தொடர்நிலை அறிக்கைகளை வழங்கித்தான் இந்துமத விழிச்சி, எழிச்சி, செழிச்சி, வளவளர்ச்சி, மறுமலர்ச்சி முதலியவைகளை செயல்படுத்திட; தெய்வீகக் கல்வி, கடவுட் கல்வி, அருட்கலைக் கல்வி,.... எனப்படும் பலவகையான கல்விகளைக் கற்றுத் தேர்ந்து, முதிர்ந்து நூற்றெட்டு (108) அருட்பட்டங்களைப் பெற்றாக வேண்டும்.

இதன்படி, இவர் அயராது முயன்று எழுபத்தாறு (76) அருட்பட்டங்களைப் பெற்றுள்ளார். மீதியுள்ள முப்பத்திரண்டு (32) பட்டங்களையும் பெறுகின்ற முயற்சியால் **அருளுலக மாணுக்கராகவே** (The Student of Divine, Mystical, Esoteric .... Doctrines) வாழ்ந்து வருகிறார்.

(3) இவர் இராசிவட்ட நிறைவுடையார், நல்லிலக்கண மார்புடையார், ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி, அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், அருளாட்சி நாயகம், இந்துமதத் தந்தை, ஞானத்தந்தை, ஞானாச்சாரியார், குருதேவர், குவலய குருபீடம், ... என்று எழுபத்தாறு (76) பட்டங்களைப் பெற்றுள்ளார். இவர் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் என்று கருவிலேயே பெற்ற திருவுடன் இலைமறைகாயாகவே செயல்பட்டு வருகிறார். இவர் சாதி, இன, மொழி, நாட்டு, .... வேறுபாடுகளோ, வெறிகளோ இல்லாமல் **'உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டையும்', 'உலகச்**

**சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தையும்**' உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

இவர்;

'மதம் ஒரு சமூக விஞ்ஞானமே',

'மதமே மனிதப் பண்பைப் பாதுகாத்துப் பயிர் செய்யக் கூடியது',

'மதமே கலைகளுக்கும், அறிவியல்களுக்கும் தாய்',

'மதமே பொறுமையையும், பொறுப்புணர்ச்சியையும் ஈன்றெடுப்பது',

'மதமே தனிமனித, குடும்ப, சமுதாய அமைதியையும், நிறைவையும், நிம்மதியையும், சமாதானத்தையும் விளைவிக்கும் ஆற்றலுடைய உழவன்',

'மதமே மனித வாழ்வுக்குரிய பொருளை வழங்குவது',

'மதமே மனித வாழ்வின் வேக, தாக, மோக வெறிகளை நெறிப்படுத்தும் ஆற்றலுடையது',

..... என்ற கருத்து விளக்க வாசகங்களை வழங்கி உலக மத மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்டு வருகின்றார்.

எனவே, உலக மதங்கள் அனைத்துக்கும் மூலமாக, தாயாக உள்ள **மெய்யான இந்துமதம்** என்கின்ற சித்தர் நெறியின் மறுமலர்ச்சிக்காக அனைவருக்கும் அழைப்பு விடுப்பதையே தம் வாழ்வாகக் கொண்டிருக்கிறார் இவர்.

**அ.வி.தி. தலைமைச் செயலாளர்,**
**பரமாச்சாரியார்.**

**//உண்மை நகல்//**
**//இந்தக் கட்டுரை "பதினெண்சித்தர் பூசைமொழிகள்" என்ற தலைப்பில் குருதேவர் அவர்கள் 1986ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிட்ட புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.//**

# பதிப்புரை

பதினெண்சித்தர்கள் இந்த மண்ணுலகின் பயிரினங்களுக்கும் உயிரினங்களுக்கும் தலைவர்களாகத் தோன்றிய மணீசர்களை (மண் + தலைவர் = மண் + ஈசர் => மணீசர்) விலங்கு நிலையிலிருந்து; அதாவது, காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த அநாகரிகங்களிலிருந்து பண்படுத்தி, பண்பட்ட மனிதர்களாக மாற்றுவதற்குப் பயன்படுத்திய கருவியும் வழிமுறையும்தான் இந்துமதம்.

அதாவது பதினெண்சித்தர்கள் மனிதர்கள் என்றென்றும் மனச்சாட்சியையுடைய பண்பாட்டுடன் வாழுமாறு செய்யக் கூடிய ஆற்றல் அரசியல் துறைக்கோ, சமுதாயத் துறைக்கோ, கலைத் துறைக்கோ இல்லையென்பதைத் திட்டவட்டமாக அறிவிக்கும் வண்ணம்; மதத் துறை ஒன்றை மட்டுமே அனைத்து வகையான அறிவியல்களுக்கும், கலைகளுக்கும் தாயாக, கருவியாக, வழியாக, வழித்துணையாக, வழிகாட்டியாக, வழிப்பயனாகப் படைத்திட்டார்கள்.

இப் பேருண்மைதான் கடந்த நான்கு யுகங்களில் இந்த மனித சமுதாயத்திற்கு அரசியல் வாதிகளாலும், கலையுலக வாதிகளாலும், சமுதாய வாதிகளாலுமே சிக்கல்களும், சிரமங்களும், தொல்லைகளும், துன்பங்களும், சோதனைகளும், இழிவழிவுகளும், சிதைவுகளும், சீர்கேடுகளும், முறைகேடுகளும், கறைகளும், குறைகளும், ... நிகழ்ந்து வந்திருப்பதின் மூலம் விளக்கம் பெற்று வந்திருக்கின்றது.

எனவேதான், இந்த இருபதாம் நூற்றுண்டில் நமது தாயகத்து மக்களையும், உலக மக்களையும் நிறைவான, அமைதியான,

மகிழ்வான, சமாதானமான, சமத்துவமான கூட்டுறவு மிக்க பொதுவுடமை வாழ்வு வாழுமாறு செய்வதற்காக உலகம் தழுவிய மத மறுமலர்ச்சிப் பணியை விரிந்தும், விரைந்தும் செயலாக்கப் புறப்பட்டிருக்கிறது இந்து மறுமலர்ச்சி இயக்கம்.

**'இந்து'** என்ற சொல்லுக்கு அணு, ஆருயிர், ஆன்மா, அன்பு, அழகு, அமைதி, சமத்துவம், சகோதரத் தத்துவம், கூட்டுறவு, பொதுவுடமை, நட்பு, பாசம், தோழமை, உறவு, உரிமை, இன்பம், சமாதானம், பொதுமை, பொறுப்பு, கடமை, கட்டுப்பாடு, ஒழுங்கு, ... முதலிய நூற்றுக்கும் மேற்பட்ட பொருள்கள் உண்டு. எனவேதான் இந்தச் சொல்லின் பெயரால் ('இந்துமதம்') குறிக்கப்படும் சித்தர் நெறி எனும் தத்துவம் உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டையும், உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தையும் உருவாக்கிடும் ஆற்றல் உடையது.

அதாவது, இந்த உலகில் முதன்முதல் தோற்றுவிக்கப்பட்ட (1986ஆம் ஆண்டுக் கணக்கின்படி - 43,73,086 ஆண்டுகளுக்கு முன்னால் இளமுறியாக் கண்டத்தில் பதினெண்சித்தர்களால் தோற்றுவிக்கப்பட்டது.) இந்துமதம் என்கின்ற சித்தர் நெறியால்தான் உலகச் சமாதானத்தையும், நல்லுறவையும், நல்குரவையும், அமைதியையும், மகிழ்வையும், சகோதரத் தத்துவத்தையும், பொதுவுடமையையும் உருவாக்க முடியும்! முடியும்! முடியும்!

இப் பேருண்மையின் அடிப்படையில்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கம்; 'உலக மதங்களின் மறுமலர்ச்சி', 'உலகப் பண்பாடுகளின் செழிச்சி', 'உலக நாகரிகங்களின் எழிச்சி', 'உலக இனங்களின் விடுதலை', 'உலக மொழிகளின் ஆட்சி மீட்சி', 'உலக நாடுகளின்

தனித்தன்மை பேணும் விடுதலை', ... முதலியவைகளுக்காக அனைத்து விதமான ஆக்க ஊக்கப் பணிகளில் ஈடுபட்டிருக்கிறது.

உலக மதங்களுக்கு மூலமாகவும், முதலாகவும் இருக்கின்ற இந்து மதத்தாலும்; உலக மொழிகள் அனைத்திற்கும் தாயாக இருக்கின்ற அண்டபேரண்டமாளும் அருளாட்சி மொழியான அமுதத் தமிழாலும்; ... மனித வாழ்வில் 'எண்ணப் புரட்சி', 'கருத்துப் புரட்சி', 'சிந்தனைப் புரட்சி', 'இலக்கியப் புரட்சி', 'கலைப் புரட்சி', ... முதலிய பல்வேறு வகையான புரட்சிகளைப் பார் எங்கும் தோற்றுவித்து; இவற்றின் மூலம், உலகம் தழுவிய ஒரு பண்பாட்டுப் புரட்சியை (A Cultural Revolution) முடிந்தவரை ஒரு முழுமைப் புரட்சியாக (The Total Revolution) உருவாக்க முயலுகிறது இந்து மறுமலர்ச்சி இயக்கம்.

அதாவது, இன்றைக்குக் கலையுலக வாதிகளாலும், இலக்கிய வாதிகளாலும், சமுதாய வாதிகளாலும், அரசியல் வாதிகளாலும் நோயுற்று மெலிந்தும், நலிந்தும், கேடுற்றும் படுக்கை நோயாளியாக மாறியிருக்கும் தாயக மக்களையும், உலக மக்களையும் மாபெரும் அடிப்படை மாற்றங்களைப் பெற்று உய்யுமாறு (The Radical changes can alone safe-guard the society from the ills and the evils.) செய்யும் ஆற்றல் இந்து மதத்திற்குத்தான் உண்டு! இந்து மதத்திற்குத்தான் உண்டு!! இந்து மதத்திற்குத்தான் உண்டு!!!

எனவேதான், இந்துமதத்தின் ஏட்டறிவையும், பட்டறிவையும் (The Theoretical and the Practical Knowledge of the Indhuism) வளவளர்ச்சியடையுமாறு செய்வதற்காகக் கையெழுத்துப் பிறதிகளும்; அச்சிட்ட அறிவிக்கைகளும்; அறிக்கைகளும்; சிறிய

பெரிய அளவில் தனிப் புத்தகங்களும்; ‘குருதேவர்’ என்ற பெயரில் மாத மலரும் ... நாடெங்கும் மக்களிடையே ‘ஞான உலா’ வருவதற்கு அனைத்து விதமான தொடர் ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

இதற்காகவே, ‘இந்துமத இலக்கியக் கழகம்’, ‘இந்துமத நூற் பதிப்புக் கழகம்’, ‘இந்துமதப் புத்தக வெளியீட்டுத் திருச்சபை’, ... முதலிய பல பதிப்பகங்களின் மூலம் அச்சிட்ட புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. இவற்றிற்கு அனைத்து மதங்களும், மொழிகளும், இனங்களும், நாடுகளும் பேராதரவு நல்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இந்துமதம் என்றால் அது ஒரு சமூக விஞ்ஞானமேயாகும். (The Indhuism is a Social Science. It is not a Religion. It is the Mother Liquor for all the arts and sciences - *His Holiness Siddhar Kaakkaiyar Mr. M.Palanisamy Pillai.*) இந்தச் சுருக்க விளக்கக் கருத்து வாசகத்தோடு ‘பதினெண் சித்தர்களின் பூசைமொழிகள்’ என்ற நூலின் பதிப்புரையை நிறைவு செய்கிறோம்.

**உண்மையுள்ள**

**பதிப்பகத்தார்.**

**//உண்மை நகல்//**

**//இந்தக் கட்டுரை “பதினெண்சித்தர் பூசைமொழிகள்” என்ற தலைப்பில் குருதேவர் அவர்கள் 1986ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிட்ட புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.//**

# முன்னுரை

கி.பி.1772இல் உலக மத மறுமலர்ச்சிப் பணிகளுக்கு வித்திடும் முயற்சியினை 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' என்ற நிறுவனத்தின் மூலம் துவக்கினர் கருவூரர் வழிவந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் எனப்படும் உ.இராமசாமிப் பிள்ளை அவர்கள். இந்த நிறுவனத்தின் கீழ் பல நிறுவனங்களைக் காலப்போக்கில் தோற்றுவித்ததோடு; தேவைக்கேற்பக் காலப்போக்கில் பல நிறுவனங்களை இ.ம.இ.யின் கீழ் தோற்றுவிக்க வேண்டுமென்ற அறிவுரையையும் வழங்கிச் சென்றுள்ளார் இவர்.

'**இந்து**' என்றால் 'தத்துவம்', 'சித்தாந்தம்', 'சமயம்', 'சமுதாயம்', 'பண்பாடு', 'நாகரிகம்', 'மனித வாழ்வு' ... என்று நூற்றுக்கும் மேற்பட்ட பொருள் சொல்லப்படுகிறது பதினெண்சித்தர்களால். எனவே, உலகம் முழுவதுமுள்ள 'ஆன்மீக வாழ்வு', 'அருள் வாழ்வு', 'சமய வாழ்வு', ... முதலியவை மறுமலர்ச்சி பெற வேண்டுமென்பதே இ.ம.இ.யின் கொள்கை, குறிக்கோள், செயல்திட்டம். இதில் சாதிவெறியோ, தீண்டாமையோ, மொழிவெறியோ, இனவெறியோ, நாட்டுவெறியோ ஊக்குவிக்கப் படுவதில்லை. அனைத்தும் விடுதலையுடன் தன்னுரிமை பெற்றுப் பெருமித வாழ்வு வாழ வேண்டுமென்பதே இதன் நோக்கம். யாரும் யாரையும் அடக்கியோ, சுரண்டியோ, ஏமாற்றியோ, அடிமைப்படுத்தியோ வாழக் கூடாது என்பதுதான் இதன் கொள்கை.

**"<u>உலக மதங்கள் அனைத்தும் இந்துமதத்திலிருந்துதான் தோன்றின</u>; <u>உலக மொழிகள் அனைத்தும் தமிழ்மொழியிலிருந்துதான் தோன்றின</u> என்பதால் எல்லா மதங்களும் ஒன்றே, எல்லா மொழிகளும் பூசைமொழிகளே"** என்று குருபாரம்பரியம் கூறுகிறது.

அரசியல் காரணமாக இனங்களுக்கும் மொழிகளுக்கும் இடையே ஆதிக்கப் போர்கள் ஏற்பட்டதன் விளைவாக மெய்யான இந்துமதம் எனும் சித்தர்நெறி வழங்கிய பூசைமொழிகள் திருத்தப்பட்டும், திரிக்கப்பட்டும், சிதைக்கப்பட்டும், முழுக்க வேற்றுமொழிச் சொற்களால் ஒலிநயம் கருதி மொழியாக்கம் செய்யப்பட்டும் மானுட சமுதாயம் பயன்படுத்திட முடியாத நிலை விளைந்திட்டது.

எனவேதான், 'உலக மத ஆய்வுக் குழு'வின் (அணுகுண்டு விஞ்ஞானி டாக்டர் ஐன்சுடீனும், பொதுவுடமைத் தத்துவ மேதை எம்.என். இராயும் சேர்ந்து உண்டாக்கிய ஆய்வுக் குழு இது.) தலைவரான உலக மார்க்சீயச் சிந்தனையாளர்களில் திரு விளாதிமீர் இலிச் இலெனினுக்கும், திரு மாவோவுக்கும் அடுத்தபடியாகக் கருதப்படும் திரு எம்.பி.பிள்ளை அவர்கள்; இந்து மதத்தின் உயிர்நாடியும், உலக மதங்களின் உயிர்மூச்சுமான பதினெண்சித்தர்களின் பூசைமொழிகளை ஒன்றுதிரட்டினார். அப்படித் திரட்டப்பட்டவைகளைப் பல மொழிகளிலும் பொருள் மாறாமல் மொழிபெயர்த்துப் பூசைகளில் பயன்படுத்தி எல்லா மானுடர்களும் நலமடைய வழி செய்தார்.

அவருடைய காலத்துக்குப் பிறகு மூன்றாவது தலைவராக இ.ம.இ.யின் பொறுப்பேற்ற பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, அரசயோகி, அருளாட்சி நாயகம், ஞானாச்சாரியார்,

குருதேவர், இந்துமதத் தந்தை, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரூர், குவலய குருபீடம் அவர்கள்; தனிமனிதர்களின் தரம், திரம், திறம், தீரம், அறப் பண்பு, ... முதலியவைகளை ஆராய்ந்து மேற்படி பதினெண்சித்தர்களின் பூசைமொழிகளை நேரில் வழங்கி வரலானர்.

இப்போது, உருவாக்கியுள்ள ஆயிரமாயிரம் சித்தர் நெறிச் செல்வர்களின் வேண்டுகோளின்படி பொதுவான பூசைமொழிகள் அச்சிடப்பட்டுள்ளன. மற்றவற்றை நேரில் குருவழியாகத்தான் பெற்று உயர்வும் உய்வும் எய்த வேண்டும்.

அன்பு

**குவலய குருபீடம்,**

**குருமகாசன்னிதானம்,**

**ஞாலகுரு சித்தர் கருவூரூர்.**

**//உண்மை நகல்//**

**//இந்தக் கட்டுரை "பதினெண்சித்தர் பூசைமொழிகள்" என்ற தலைப்பில் குருதேவர் அவர்கள் 1986ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிட்ட புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.//**

# அறிமுகவுரை

**பிறமாச்சாரியார் சி.கவிக்குமார்**

நமது நாடு பழமையான நாடு! பண்பாடு மிக்க நாடு! வேதங்களையும், உபநிடதங்களையும் கொண்ட நாடு! வரலாறுகளையும், வளமிக்க இலக்கியங்களையும், பத்திச் சுவைமிக்க இதிகாசங்களையும் கொண்ட நாடு! தத்துவங்களையும், சித்தாந்தங்களையும் போதிக்கும் ஞானிகளையும், தவசிகளையும், யோகிகளையும், ... கொண்ட நாடு! வீதிகள் தோறும் கோயில்களையும்; ஊர்கள் தோறும் விண்முட்டும் கண்கவர் கோபுரமுடைய ஆலயங்களையும் கொண்ட நாடு! ...... என்ற புகழுக்குரிய நாடு நம் நாடு. இவ்வளவு சிறப்புக்களுக்கும் காரணமான பதினெண்சித்தர்களின் இந்துமதம் இருட்டடிப்பும் சிதைவும் பெற்றுவிட்டது.

அதனைச் சீர்செய்திட பதினெண்சித்தர்களின் வழித்தோன்றலான கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் கடந்த மூன்று யுகங்களில் பலமுறை தோற்றுவிக்கப்பட்ட இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை இந்த யுகத்துக்காக கி.பி.1772இல் தோற்றுவித்தார். இருந்தும் இ.ம.இ. இலைமறை காயாகவே இருந்து பாழடைந்த கோயில்களைச் செப்பனிட்டும்; மனிதர்களில் தகுதியுடையவர்களை அருளூற்றுக்களாக உருவாக்கியும் வந்தது. ஆனால், இப்பணிகளால் முழுமையாக இந்துமதத்தை மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும், ஆட்சிமீட்சியும் அடையுமாறு செய்ய முடியவில்லை.

எனவேதான், கடந்த 43,73,086 ஆண்டுகளில் (*1986ஆம் ஆண்டுக் கணக்கின்படி*) தோன்றிய பதினெண்சித்தர் பீடாதிபதியின் வரிசையில்

12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் தோன்றியுள்ள குவலய குருபீடம், இந்துமதத் தந்தை, ஞானாச்சாரியார், அருளாட்சி நாயகம், அரசயோகி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூறார் அவர்கள் இந்த இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை அரசுப்பதிவு பெறச் செய்து, வெளிப்படையாகவே இயக்கப் பணிகளைத் துவக்கினார்.

இதற்காக ஆயிரமாயிரம் கட்டுரைகளும், நூற்றுக்கணக்கான நூல்களும் ஏட்டுலகில் உருவாக்கப்பட்டுள்ளன. நாட்டு நடப்பில் நாற்பதுக்கும் மேற்பட்ட அருட்பணி விரிவாக்கத் திட்ட நிலையங்களையும், பல்லாயிரக்கணக்கான அடியான்களையும், அடியாள்களையும், அடியார்களையும், பல நூறாயிரக்கணக்கான ஆர்வலர்களையும், விருப்பாளர்களையும், ஏந்தாளர்களையும், ... உருவாக்கி இரவுபகலாகச் செயல்பட்டு வருகிறார்.

நம் நாடு இந்துக்கள் வாழுகின்ற நாடு! இந்துமதச் சம்பிறதாயங்கள் ஏற்றுப் போற்றப்படும் நாடு! இந்துமதத்துக்கென்று பல்வேறு பீடங்கள், மடங்கள், ... செயல்பட்டு வரும் நாடு! இவையன்றி இளைஞர்களைக் கொண்டு இயங்கும் இயக்கங்களான இந்து முன்னணி போன்ற அமைப்புக்கள் கொண்ட நாடு! இவ்வளவுக்கும் இடையில் ஏன் இந்து சமய சமுதாய அரசியல் மறுமலர்ச்சிக்கென ஓர் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது என்ற சிந்தனை எழுவது இயற்கையே!

இம் மண்ணுலகில் மனிதகுலம் பண்பட்டு வாழப் பதினெண்சித்தர்கள் 43,73,086 ஆண்டுகளுக்கு முன்னால் (*1986ஆம் ஆண்டுக் கணக்கின்படி*) வழங்கிய நெறியே ‘சித்தர் நெறி’ எனப்படும் இந்துமதம். இவ் விந்துமத நெறிகள், முறைகள், ... யாவும் தமிழிலேயே படைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் சத்தியும் சித்தியும் பெற்றவர்கள் ஏராளம். இருந்தும் தமிழர்கள் தங்களுடைய இந்துமத ஏட்டுலகச்

செல்வங்களையும், நாட்டுலகச் செல்வங்களையும் மறந்திட, துறந்திட, மறுத்திட, வெறுத்திட நேரிட்டு விட்டது.

அதற்குக் காரணம் இந்துமதம் செழித்திருந்த இந்தியாவுக்குள் பிழைப்பை நாடி வந்த பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் வடஆரியர்களின் சூழ்ச்சிகளும், சதிகளுமே ஆகும். அதாவது, தமிழர்களுக்கு இனப்பற்று, மொழிப்பற்று, நாட்டுப்பற்று, சுயமரியாதை, உரிமையுணர்வு, விடுதலை வேட்கை, தன்னம்பிக்கை, ... முதலிய அனைத்தையும் ஊட்டி வளர்த்த தாயான இந்துமதம் அன்னியர்களால் சிறை பிடிக்கப்பட்டுவிட்ட காரணத்தால்தான் தமிழர்கள் கூலிகளாக, போலிகளாக, கோழைகளாக, அடிமைகளாக, தன்னம்பிக்கை அற்றவர்களாக, தன்மானம் அற்றவர்களாக, இன விரோதிகளாக, மொழித் துரோகிகளாக, ... மாறிவிட்டார்கள்.

வடஆரியர்கள் தங்களுடைய காட்டுமிராண்டித்தனமான கற்பனைகளையும், ஆபாசம் மிகுந்த புராண இதிகாசங்களையும், மூடநம்பிக்கைகளையும் ஆயுதமாகக் கொண்டு பதினெண்சித்தர்கள் படைத்த பகுத்தறிவு மதமான இந்துமதத்தைச் சிதைத்துச் சீரழித்து உருக் குலைந்து போகச் செய்து விட்டார்கள். இந்துமதக் கடவுள்களையும், புராண இதிகாசங்களையும், வரலாற்று வீரர்களையும் தங்களுடைய சமசுக்கிருத மொழிக்கும், வேத மதத்துக்கும் உரியவர்களாக்கி விட்டார்கள்.

அதாவது, காலக்கணக்கீடோ, வரலாறோ, தத்துவமோ, செயல் சித்தாந்தமோ இல்லாத ஒரு பயனற்ற மதமாக இந்துமதத்தை மாற்றி விட்டார்கள். இம் முயற்சியை யாருமே புரிய முடியாதபடி; ஞான சித்தராக, வேத சித்தராக, நவநாத சித்தராகத் தோன்றிய 32வது ஆதிசங்கராச்சாரியாரைத் தங்களுடைய வேதமத குருவாகவும்,

சமசுக்கிருத மொழித் தலைவராகவும் கற்பனைக் கதையொன்றை உருவாக்கி வெற்றி பெற்றிட்டார்கள் இந்த வடஆரியர்கள்.

எனவேதான், கருணீக்க சைவ வேளாளர் மரபில் தோன்றிய தமிழ் அந்தணனான சிவாச்சாரியார் காலடி ஆதிசங்கராச்சாரியார் ஒரு பிருமணர் என்ற பொய் வெற்றி பெற்றதால்; தமிழர்கள் சூத்திரர்களாக ஆக்கப்பட்டார்கள். இரு பெரும் பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் முயற்சிகள் தோற்றன..... காலப்போக்கில், தமிழர்களுக்குப் பிருமணர்கள் மீதும், சமசுக்கிருதத்தின் மீதும் ஏற்பட்ட வெறுப்பு இந்துமத மறுப்பாகவும், எதிர்ப்பாகவும், நாத்திகமாகவும் மாறின. இந்த நிலையில்தான் குருதேவர் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி முப்பதாண்டு காலமாக மிகமிக நுட்பமாக இந்து மறுமலர்ச்சிப் பணிகளை ஆற்றி வருகிறார். ஆனால், கணிசமான வெற்றி இன்னும் உருவாகவில்லை.

பதினெண்சித்தர்களின் கருவழி வாரிசுகளும், குருவழி வாரிசுகளும் உலகியலாக என்றென்றும் நின்று நிலவிடும் வண்ணம் உருவாக்கிய சைவ வைணவ மடங்கள் எல்லாம் தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு, தமிழ்ப் பண்பாடு, ... என்ற அரண் அமைத்தே செயல்படுகின்றன. ஆனால், பிருமண வேத மதமும், சமசுக்கிருத மொழியும் இந்த மடங்களைச் செயலற்றனவாக, பகலில் ஏற்றிய அகல்விளக்கு ஒளியாக ஆக்கிவிட்டன.

இதேபோல், இத்திருநாட்டில் உருவான மார்க்சீய இயக்கம் தொழிலாளர்களின் கூலிப் பிறச்சினைகளில் மட்டுமே தலையிடக் கூடிய ஒன்றாகி விட்டதால்; சமய சமுதாய அரசியல் கலை இலக்கிய மறுமலர்ச்சிப் பணிகளில் ஈடுபட முடியாததாகி விட்டது. இதேபோல், தமிழினத் தலைவர், பெரியார் ஈ.வெ.ரா. உருவாக்கிய

கழகம்; அவருக்குப் பிறகு ஒரு பொழுதுபோக்குக் கழகமாகித் தமிழர்களுக்கு அறிவுரை கூறவோ, வழிகாட்டவோ, தலைமைதாங்கவோ தகுதியற்றதாகி விட்டது.

இவற்றை எல்லாம் உணர்ந்துதான் எங்களது குருதேவர் 32 ஆதிசங்கராச்சாரியார்கள், 48 அனுதிசங்கராச்சாரியார்கள், 40 சங்கராச்சாரியார்கள், 48 சிவாச்சாரியார்கள், 48 பரமாச்சாரியார்கள், 48 ஈசுவராச்சாரியார்கள், 48 பதினெண்சித்தர் பீடவழி ஆச்சாரியார்கள், 13 வகைக் குருவழி ஆச்சாரியார்கள், 13 வகைக் கருவழி ஆச்சாரியார்கள், 64 நாயன்மார்கள், 12 ஆழ்வார்கள், ... முதலிய அனைவரின் கருத்துக்களையும், உழைப்புக்களையும்; அருளுலக விழிச்சிக்காகவும், எழிச்சிக்காகவும், செழிச்சிக்காகவும், ... செயலாக்குகின்றார்.

மேலைய நாட்டு நாகரிகத்தாலும், அன்னிய மதங்களாலும் ஏற்பட்டு வரும் கலாச்சாரச் சீரழிவையும், பண்பாட்டு நலிவையும், சமூக நோய்நிலையையும், ... இப்பொழுதாவது தடுத்து நிறுத்த வேண்டுமென்ற உணர்வால் செயல்படுபவரே எங்களது ஞானத் தந்தை, தலைவர், குருதேவர், ஞாலகுரு சித்தர் கருவூரார். இவரது முப்பதாண்டுக்கும் மேற்பட்ட பணிகளின் வெற்றியின்மை ஆராயப்பட்டே '**மெய்யான இந்துமதமும்**, *பொய்யான ஹிந்துமதமும்*' என்ற தலைப்பில் கட்டுரைகளும், நூல்களும் அச்சாகின்றன. அருளை அநுபவப் பொருளாக வழங்கும் ஆற்றலுடைய பதினெண்சித்தர்களின் பூசாவிதிகள், பூசைமொழிகள் அச்சாகியுள்ளன. "குருதேவர்" அறிக்கை மாதாமாதம் மலராக அச்சாகி வெளிவருகின்றது. இந்துமத வரலாறு, இலக்கிய வரலாறு, வழிபாட்டுநிலைய வரலாறு, இந்துமதத் தத்துவம், சித்தாந்தம், ... முதலியவை மேடைகளில் விளக்கி யுரைக்கப்படுகின்றன.

தமிழகம் முழுவதும் பரவலாகச் சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள், ஆர்வலர்கள், விருப்பாளர்கள், ஏந்தாளர்கள் உருவாகி

விட்டார்கள். இனிமேல் ஆரிய மாயை அகலும்! பிருமணச் சூழ்ச்சிகள் முறியடிக்கப்படும். தமிழர்கள் ஒன்று திரளுவார்கள். ஒற்றுமைப்படுவார்கள்! ஒருமைப்பாட்டுடன் செயல்படுவார்கள். தமிழினம் உரிமையும் பெருமையும் பெற்றுப் பண்பாட்டு விடுதலையுடன் நல்வாழ்வு வாழ்ந்திடும்! வாழ்ந்திடும்! வாழ்ந்திடும்!

*"பயிரினங்கள், உயிரினங்கள், உயிரற்ற பொருள்கள், ... முதலியவற்றில் எதனிடத்தாவது அன்பு செலுத்தி மரியாதையும், மதிப்பும் கொண்டு வாழ்ந்திட்டால் அதுதான் சிறந்த மத வாழ்வு"* என்று **குருபாரம்பரியம்** கூறுகிறது.

*"நாத்திகர், ஆத்திகர், கடவுள் மறுப்பாளர், வெறுப்பாளர், ... என்ற வேறுபாட்டிற்கே இடமில்லை. ஒருவர் தமது கொள்கையையோ அல்லது தலைவனையோ உண்மையான பற்றுடன் ஏற்றுப் போற்றுவதுதான் சிறந்த பத்தி வாழ்வு, உண்மையான மத வாழ்வு"* என்று **குருவாசகம்** கூறுகிறது.

*"எவரையும் புண்படுத்தாமல், வற்புறுத்தாமல், அனைவருடனும் அன்புடன் பழகி உதவி வாழ்வதே உண்மையான பத்தி வாழ்வு, மத வாழ்வு"* என்று **குருவாக்கியம்** கூறுகிறது.

*"உருவம், அருவம், அருவுருவம் ... என்ற வேறுபாடின்றி அனைத்திடமும் உண்மையான மதிப்பும் மரியாதையும் செலுத்தி அவற்றின் உரிமை வாழ்வுக்கு ஊறு பயக்காமல் வாழ்வதே அனைத்து வகையான சித்திகளையும் தரக்கூடிய பத்தி வாழ்க்கை"* என்று **குருவாக்கு** கூறுகிறது.

"இந்த ஒருசில வாசகங்கள் போதும் பதினெண்சித்தர்கள் படைத்த இந்துமதத்தின் போதனைப்படிதான் உலக மக்கள் வாழுகிறார்கள் என்ற பேருண்மையை விளக்கிட" என்று இ.ம.இ.யின் இரண்டாவது

தலைவர் சித்தர் காகபுசுண்டர் எனும் காக்கையர் ம.பழனிச்சாமி பிள்ளை அவர்கள் கூறியுள்ளார்கள்.

இன்றைய இந்துமதத் தந்தை, குருதேவர், குவலய குருபீடம், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரூர் அவர்கள்; *"... நான் இந்துமதத்தைப் பற்றி யாருடனாவது விவாதித்து உரையாட வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். ஆனால், மிகமிகப் பெரிய மதத் தலைவர்கள் முதல் சாதாரண பத்தன் வரை யாருமே இதற்குத் தயாராக இல்லை. இதற்குக் காரணம் என்ன? எவருக்குமே இந்துமத வரலாற்றையோ, தத்துவத்தையோ, செயல் சித்தாந்தத்தையோ தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வமும் இல்லை, அக்கரையும் இல்லை. ஆனால், அவரவர் குடும்பப் பழக்க வழக்கப் படியோ! அல்லது சொந்த விருப்பு வெறுப்புக்களின் படியோ! குறிப்பிட்ட கடவுளை வணங்கி வழிபட்டு இந்துவாக வாழுகிறார்கள். இப்படிப்பட்ட நல்லவர்களை, மெய்யன்பர்களை, பத்தர்களை, கடமை வீரர்களை, மதவாதிகளை ... ஓரளவு பொறுப்புணர்வும், பொறுமையும் பெற்று இந்துமதம் பற்றிச் சிந்திக்கும்படிச் செய்து விட்டால் போதும்....; மிகமிக விரைவில் இந்துமதத்துக்கென நல்ல வலுவான கட்டமைப்புக்களை உடைய நிறுவனங்களையும், வளமான பயன்மிகு சட்டதிட்டங்களை உடைய நிருவாகத்தையும் உடைய இயக்கம் ஒன்றை உருவாக்கிட முடியும். அந்த இயக்கம் இந்து மறுமலர்ச்சி இயக்கமாக இருப்பதுதான் உரிய பயன்களைப் பெரிய அளவில் வழங்கிடும்...."* என்று அடிக்கடி கூறுவதையே இறுதியாகக் கூறி இந்த அறிமுகவுரையை நிறைவு செய்கிறேன்.

**//உண்மை நகல்//**

**//இந்தக் கட்டுரை "பதினெண்சித்தர் பூசைமொழிகள்" என்ற தலைப்பில் குருதேவர் அவர்கள் 1986ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிட்ட புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.//**

# பின்னுரை

1) 'பதினெண்சித்தர்களின் பூசைமொழிகள்' என்ற தலைப்பில் வெளிவரும் இந்த நூலுக்கு முன்மாதிரியாக கி.பி.1772இல் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவித்த கருவூரூர் வழிவந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமி பிள்ளை அவர்கள் தன்னுடைய மாணுக்கர்களின் மூலம் தென்னை ஓலைகளிலும், பனை ஓலைகளிலும் இதுபோல் எழுதித் தொகுத்த நூற்றுக்கணக்கான ஏட்டுச் சுவடிகளைப் பலருக்கும் வழங்கினூர்.

அப்பொழுது அவர் அருளுரையாக,

"... **பதினெண்சித்தர்கள் படைத்த மெய்யான இந்துமதம்** மனிதனின் அகவாழ்வையும், புறவாழ்வையும் பதப்படுத்திப் பக்குவப் படுத்துவதற்குரிய அருளை ஊற்றுக ஊறச்செய்யும் பூசாவிதிகளையும், பூசைமொழிகளையும் நிறையப் பெற்றிருக்கின்றது. ஆனுல், நான்காவது யுகமான கலியுகம் பிறந்து 2000 ஆண்டுகள் கழித்து இந்தியாவுக்குள் வந்து இந்துமதத்திற்கு ஊறு விளைவிக்க முற்பட்ட பிறமண்ணினர் எனப்படும் பிருமணராகிய வடஆரியர்கள் அருளூற்றுக்களான பூசாவிதிகளையும், பூசைமொழிகளையும் மிகப்பெரிய அளவில் சிதைத்துச் சீரழித்துக் கேடுகளைச் செய்துவிட்டார்கள்.

எனவேதான் மனித வாழ்வுக்கு மிகமிகத் தேவையானதும் பயனுடையதுமான **சித்தர்நெறி எனும் இந்துமதம்** எண்ணற்ற ஏக்கநிலைகளையும், தேக்கநிலைகளையும் பெற்றுச் செயல்நலம் குன்றி விட்டது. இதற்காக, இன்றுள்ள பிருமணர்களை மறுத்தும், வெறுத்தும்,

எதிர்த்தும் செயல்படுவதை விட அவர்களும் இந்துமதத்தின் அரிய பயன்களை அநுபவப்பூர்வமாகத் தெரிந்து முழுமனதாக மெய்யான இந்துமதத்தை ஏற்றுப் பயனடையும் வண்ணமாகவே பூசாவிதிகளும், பூசைமொழிகளும் தொகுக்கப்பட்டச் சுவடிகள் உள்நாட்டில் இருப்பவர்களுக்கும், கடல்கடந்து சென்றிருப்பவர்களுக்கும் வழங்கும் பணி துவக்கப்பட்டிருக்கிறது.

இதற்காகவே, எம்மிடம் சிற்பக் கலையும், ஓவியக் கலையும், சேவலோன் கலைகளும் (போர்க்கலைகள்) கற்றுக் கொள்ளும் மாணுக்கர்களை யெல்லாம் இரவு பகலாக ஏடுகளுக்குப் படியெடுக்கும் பணியில் ஈடுபடுத்தியுள்ளோம். எனவே, **‘இந்தச் சுவடித் தொகுப்பு இந்துமதத்தைக் காக்கும் அரணுக, கருவூலமாக, விதைப்பண்ணையாக, நாற்றுப்பண்ணையாக, பயிற்சிப் பள்ளியாக, குருகுலமாக என்றென்றும் பயன்பட்டிடும், பயன்பட்டிடும், பயன்பட்டிடும்’** என்று நம்புகிறோம் யாம்.

எனவே, பிரமணர்களும், பிற மதத்தவர்களும் இந்த அருட்பயிர் விதைகளையும், நாற்றுக்களையும் தங்களுடைய வாழ்க்கையில் பயிராக்கிப் பயனடைய வேண்டும். எல்லா மொழியினரும் இந்தச் சுவடிகளின் கருத்துக்களைத் தங்கள் தங்களின் மொழிகளில் மொழிபெயர்த்துக் கொள்ளலாம். ஆனுல், ஒலிநயத்துக்கு ஆசைப்பட்டுப் பொருளற்றச் சொற்களால் இந்த வாசகங்களைத் தங்கள் மொழியில் படைக்க வேண்டாம். **இம்மண்ணுலகின் முதல் நிலமான இளமுறியாக் கண்டத்தில் முதல் மொழியான தெய்வீகத் தமிழில் பிறந்த முதல்மதமான இந்துமதத்தால்தான் உலக மானுட நலம் விளையும், விளையும், விளையும்.”**

என்று வழங்கியதை இந்தப் பதிப்பில் பின்னுரையாக வெளியிடுகிறோம். அவருடைய கனவு நனவாக வேண்டும்.

2) பதினெண்சித்தர்கள் தாங்கள் படைத்த **'மெய்யான இந்துமதம்'** என்றென்றும் மனித சமுதாயத்திற்குப் பயன்பட வேண்டும் என்பதற்காகவே எண்ணற்ற இலக்கியங்களை 27 வண்ணங்களில் (வகைகளில்) படைத்தார்கள். இவையல்லாமல் பதினெண்சித்தர் பீடாதிபதிகளுக்கே உரிய 48 வகை இலக்கியங்களையும் படைத்தார்கள். இவற்றிற்கும் மேலாக **உரிய பக்குவமுடையவர்கள் மட்டுமே குருவழியாகக் கற்றுக் கொள்ளும் வண்ணம் எழுதாக் கிளவிகளாகவும், எழுதிக் காத்திட்ட மறைகளாகவும் 18 வகை இலக்கியங்களை உருவாக்கிச் சென்றுள்ளார்கள். இவையே, இந்துமதத்திற்காக அவர்கள் உருவாக்கிய ஏட்டுலகம் (The Theoretical Knowledge).**

3) பதினெண்சித்தர்கள் இந்துமத நிறுவன கட்டமைப்புக்காகவும், நிர்வாக ஒழுங்கமைப்புக்காகவும் 48 வகை வழிபடுநிலையினர்கள், 48 வகை கோயில்கள், 48 வகை கருவறை மூலவர்கள், 48 வகை அருட்பட்டத்தவர்கள், 48 வகை அருளாளர்கள், அருளாளிகள், அருளாடு நாயகங்கள், 48 வகை மருளாளர்கள், மருளாளிகள், மருளாடு நாயகங்கள், 48 வகை பதினெண்சித்தர் பீடாதிபதி வழி ஆச்சாரியார்கள், 13 வகைக் கருவழி ஆச்சாரியார்கள், 13 வகைக் குருவழி ஆச்சாரியார்கள், 8 வகை மூல ஆச்சாரியார்கள், ... என்று பல்வேறு வகையினரை, நிலையினரை உருவாக்கி யுள்ளனர். இதுவே, அவர்களின் நாட்டு நடப்புக்குரிய உலகியல் திட்டம்.

4) **இப்படிப் பதினெண்சித்தர்கள் எண்ணியெண்ணி, நன்கு திட்டமிட்டு மிகச் சிறந்த ஏட்டறிவும், பட்டறிவும் என்றென்றும் செழிப்பாக இருக்கக் கூடிய இந்துமதத்தைப் படைத்திருந்தும்; அது காட்டுமிராண்டித்தனமான கற்பனைகளாலும், மூடப் பழக்க வழக்கங்களாலும், பயனற்ற சாத்திரச் சம்பிறதாயக் குப்பைகளாலும் செயலிழக்க நேரிட்டு விட்டது. இந்த மாபெரும் செயலிழப்பு நிலையை ஈடுகட்டுவதற்காகத்தான் இப்பொழுது இந்தப் 'பதினெண்சித்தர்களின் பூசைமொழிகள்' என்ற நூல் வெளியிடப் படுகிறது. இதனை, அனைத்து மதவாதிகளும், சமய ஆர்வலர்களும், மெய்யன்பர்களும், பத்தர்களும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வேண்டப்படுகிறது.**

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதே யல்லால் வேறொன்றும் வேண்டேன் பராபரமே."

"நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்."

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**

**//உண்மை நகல்//**
**//இந்தக் கட்டுரை "பதினெண்சித்தர் பூசைமொழிகள்" என்ற தலைப்பில் குருதேவர் அவர்கள் 1986ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிட்ட புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.//**

# இந்து மறுமலர்ச்சி இயக்க முழக்கங்கள்

1. உலக அருளாளர்களே! ஒன்றுதிரளுங்கள்! ஒற்றுமைப் படுங்கள்! ஒருமைப்பாட்டுடன் செயல்படுங்கள்!

2. உலக மதத் தலைவர்களே! ஒன்றுதிரளுங்கள்! ஒற்றுமைப் படுங்கள்! ஒருமைப்பாட்டுடன் செயல்படுங்கள்!

3. உலக மதவாதிகளே! ஒன்றுதிரளுங்கள்! ஒற்றுமைப்படுங்கள்! ஒருமைப்பாட்டுடன் செயல்படுங்கள்!

4. உலகப் பத்தர்களே! மெய்யன்பர்களே! ஆத்திகர்களே! மத வரலாறுகளையும், இலக்கியங்களையும் படித்துப் போற்றுங்கள்!

5. உலகப் பூசாறிகளே! அவரவர் மதப் பூசைமொழிகளை நன்கு பயின்று ஓதி அருளூற்றுக்களாகத் தயாராகுங்கள்!

6. உலகச் சமயவாதிகளே! வழிபாட்டு நிலையங்களைத் தூய்மையும், வாய்மையும், அருளும் நிறைந்தவைகளாக ஆக்குங்கள்!

7. உலக மதவாதிகளின் ஒற்றுமையும், ஒருமைப்பாடுமே மதப் போலிகளையும், காலிகளையும், துரோகிகளையும், விரோதிகளையும் திருந்தச் செய்யும்!

8. உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை உருவாக்கினால்தான் மதத்துறை மற்ற துறைகளுக்குத் தலைமைதாங்கி வழிகாட்டியாகவும், வழித்துணையாகவும் செயல்பட முடியும்!

9. உலக மதமறுமலர்ச்சிப் பணியே உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை உருவாக்கும்!

10. உலக மத விழிச்சியும், எழிச்சியும், செழிச்சியுமே சர்வாதிகாரங்களையும், ஆத்திக வெறிகளையும் முடிவுறச் செய்து விடுதலை வாழ்வை உரிமையும், பெருமையும் பெறச் செய்திடும்!

**//உண்மை நகல்//**
**//இந்த முழக்க வாசகங்கள் "பதினெண்சித்தர் பூசைமொழிகள்" என்ற தலைப்பில் குருதேவர் அவர்கள் 1986ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிட்ட புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டவை.//**

# தெய்வீக மருத்துவம்? - ஒரு மடல்!

**திரு சித்தர் (டாக்டர்) ப.கிருட்டிணமூர்த்தி எம்.ஏ., (பி.எச்.டி.)**

**மத ஆய்வாளர், தெய்வீக மருத்துவமனே, திருச்சி - 6**

பேரன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய ஐயா பண்டிட் P. முத்துக்கருப்ப பிள்ளை அவர்களுக்கு சித்தர் (டாக்டர்) ப. கிருட்டிணமூர்த்தி எழுதிக் கொண்டது.

தாங்கள் பொதுமக்களின் நம்பிக்கையையும், மருத்துவர்களின் நம்பிக்கையையும் ஒருங்கே இழந்து விட்டிருந்த 'சித்த மருத்துவ'த்திற்கு இருசாராரிடமிருந்தும் நம்பிக்கையை வரவழைத்துக் கொடுத்தவர். தங்களின் அரும்பெரும் முயற்சிகள் ஓர் அமைப்பையும் ஏற்படுத்தின. இந்த ஆரம்ப முயற்சி மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தங்களின் முயற்சியின் விளைவு காலப் போக்கில் மிகப் பெரிய சாதனையாக மலரும் என்பதில் ஐயமே இல்லை. இன்றைக்கு சித்த மருத்துவத்துக்கு ஏற்பட்டுள்ள செல்வாக்கு தங்களைப் போன்றோரால் உருவானதாகும்.

சித்தர்களின் மருத்துவத் துறை மனித உடலின் குறைகளை அகற்றி நிறைவையளிக்கும். அதுபோல், சித்தர்களின் தத்துவங்கள், மனித சமுதாய அமைப்பிலும் செயலிலும் உள்ள குறைகளை அகற்றி நிறைவையளிக்கும். அதனால், தங்களைப் போன்றோர் சித்தர்களின் மருத்துவக் கலையோடு நின்று விடாமல் அவர்களின் தத்துவக் கலைகளிலும் அக்கரை காட்டிட வேண்டும் - சித்த மருத்துவத்துக்குரிய பச்சிலை மூலிகைகள், மண்கள், அமிலங்கள், நீர்கள், உப்புக்கள்

முதலியன பற்றி தெளிவான நூல்கள் வெளியிடப்பட வேண்டும். சித்த மருத்துவத்தை ஈன்றெடுத்த சித்தர்களின் வாழ்க்கை வரலாறும், வாழ்வியல் சாதனைகளும் தெளிவாக விளக்கி உரைக்கப்படல் வேண்டும். அவர்தம் பெருமை அவனி முழுவதும் பரவிட வேண்டும். அவர்களின் அரிய சாதனைகள் மொழி, இனம், நாடு முதலிய வரம்புகளைக் கடந்து வையமனைத்தும் பயன்பட்டிட வேண்டும். அதற்குரியன அனைத்தும் திட்டமிட்டு, முறைப்படி செய்யப்பட வேண்டும். இத்துறையில் தங்களைப் போன்றோர் ஆழ்ந்த ஈடுபாட்டையும், அளப்பரிய உழைப்பையும் நல்க வேண்டும்.

## <u>தெய்வீக மருத்துவம் (Mystical Treatment):-</u>

சித்த மருத்துவத்தில் 'மணி - மந்திரம் - மருந்து' என்ற மூன்று பெரும் பிரிவுகள் உண்டு. மணி (Light Rays) என்பது 'ஒளிக் கற்றை'களைப் பயன்படுத்திச் செய்யப்படும் மருத்துவம். மந்திரம் (Sound Waves) என்பது 'ஒலி அலை'களைப் பயன்படுத்திச் செய்யப்படும் மருத்துவம். மருந்து (Medicine) என்பது பச்சிலை மூலிகை, மண், உப்பு, இரசம் முதலிய பிறவற்றைக் கொண்டு செய்யப்படும் மருத்துவம். இதில் முதலிரண்டும் சேர்ந்ததே 'தெய்வீக மருத்துவம்'. <u>முதலில் இந்த இரு (**மணி - மந்திரம்**) முறைகளால்தான் ஒரு நோயாளிக்கு மருத்துவம் பார்க்கப்படும். இவற்றால் நலமடையாத நோயாளிகளுக்குத்தான் **மருந்து** கொடுக்கப்படும்</u>. ஆனால் பல்வேறு மதக் கலப்பாலும், அரசியல் மாற்றங்களாலும், தெளிவற்ற விஞ்ஞானப் பற்றாலும், தெய்வநம்பிக்கை குறைவாலும், தகுதியும் திறமையும் மிக்க சித்த மருத்துவர்கள் குறைந்ததாலும் இந்த தெய்வீக மருத்துவம் நாளடைவில் குறைந்து மறைந்தது.

தெய்வீக மருத்துவத்தின் மூலம் மூளைக் கோளாறு (Mental Disorders), நரம்புத் தளர்ச்சி (Nervous Disabilities), வயதுக்கேற்ற வளர்ச்சியின்மை, ஆறாத புண் (Unhealable wounds), நினைவாற்றல்

குறைபாடு (Defect in Memory Power), செரிமானக் கோளாறு (Defect in Digestion), உடலின் ஒரு பகுதி அல்லது உடல் முழுவதிலும் எரிச்சல், பக்கவாதம் முதலிய நோய்களைக் குணப்படுத்த முடிகிறது. இதுபற்றி மேற்கொண்டு ஆராய்ச்சி செய்தால் புற்று நோய் (Cancer), தொழு நோய் (Leprosy), எலும்புருக்கி நோய் (Tuberculosis) முதலியவைகளுக்கும் முடிவு ஏற்படும். பெரும்பான்மையான தோல் வியாதிகளுக்கு (Skin Diseases) மந்திரமும், மருந்தும் (Mysticism and Medicine) விரைவில் பயனளிக்கின்றன.

தெய்வீக மருத்துவத்தின் சிறப்பு மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும், அறுபது வயதுக்கு மேற்பட்ட பெரியவர்களுக்கும் மந்திரிப்பதன் மூலம் எல்லா நோய்களையும் நலப்படுத்துவதாகும். இன்று அரசும், மக்களும் சித்த மருத்துவத்தில் ஆர்வம் காட்டிடுவதால் மீண்டும் தெய்வீக மருத்துவம் அதற்குரிய இடத்தைப் பெற வேண்டும். சித்த மருத்துவத்தின் மூன்றில் இரண்டு பங்கான இதனை முறைப்படி ஆராய வேண்டும். இல்லாவிடில் இது அழிந்து விடும். தெய்வீக மருத்துவத்தை இழந்தால் சித்த மருத்துவம் முழுமையற்றதாகி விடும். பிறகு குறைபாடுடைய சித்த மருத்துவத்தால் மக்களின் குறைகளை அகற்ற முடியாது. தெய்வீக மருத்துவத்தால் மனித சமுதாயத்தின் துன்பமெனும் இரவுக்கு இன்பமெனும் விடிவு ஏற்படும்!

உலகிலுள்ள எல்லா மருத்துவ முறைகளும் புற்றுநோய், எலும்புருக்கி நோய், தொழுநோய், ... முதலியவற்றைக் கண்டு அருவெறுப்பும், அச்சமும், ஆயாசமும் அடைகின்றன. ஆனால் காலத்தாலோ, கற்பனையாலோ கணக்கிட முடியாக் காலம் முதல் கடமையாற்றிடும் சித்த மருத்துவம் மேற்குறிப்பிட்ட நோய்களைக் கண்டு கலங்கவோ, கவலைப்படவோ இல்லை. இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் சித்த மருத்துவம் மேற்குறிப்பிட்ட நோய்களை மற்ற எல்லா நோய்களோடும் ஒன்றாகவே கருதிற்று. அதனால்தான் இன்று உலகையே

அச்சுறுத்தும் இந்நோய்களுக்கென்று தனித்த முறையில் கவனம் செலுத்துவது போல் அன்று செலுத்தப்படவில்லை. எனவேதான் சித்த மருத்துவத் துறையில் மேற்குறிப்பிட்ட நோய்களுக்கென்று குறிப்பிட்ட மருந்துகளை மட்டும் தேர்ந்தெடுக்க முடியவில்லை. அதனால், தோல் வியாதிகளுக்கும் பொதுவாக உடல் வலிமைக்கும், இரத்த சுத்திக்கும் உள்ள மருந்துகளை அடிப்படையாகக் கொண்டே ஆராய்ச்சி செய்ய வேண்டியிருக்கிறது.

சித்த மருத்துவத்தின் உயிரும், உயர்வும் மந்திரங்களை மருந்தோடு சேர்த்துப் பயன்படுத்துவதில்தான் இருக்கிறது. ஆனால், எப்படியோ காலப்போக்கில் இணைபிரியாதிருந்த இவையிரண்டும் பிரிந்திட்டன. பிரிந்தவை மீண்டும் கூட முடியாதபடி இரண்டுக்கும் இடையில் ஏற்பட்ட இடைவெளி பெருகிக் கொண்டே வந்து விட்டது. ஆனால், காலமும் கருத்தும் கனிந்திட்டன. இன்றைக்கு என் போன்றோர் ஆங்காங்கே தெய்வீக மருத்துவத்தைச் செயலாக்குகின்றனர். இது நாடெங்கும் ஒரே வண்ணமாக நடப்பதற்குரியன விரைவில் செய்யப்பட வேண்டும். அரிய பெரிய உண்மைகளைத் தெரிந்து கொள்வதில் ஏற்படும் தொல்லைகளையும், துன்பங்களையும் விடப் பன்மடங்கு தொல்லைகளும், துன்பங்களும் அவற்றைக் காத்துச் செயலாக்குவதில்தான் இருக்கிறது. இதை அனுபவித்தவர்களால்தான் உணர முடியும். அதனால்தான் பல அரிய பெரிய உண்மைகளும் சாதனைகளும் ‘கோழையின் கைவாள்’ போல் யாருக்கும் பயனற்று அழிய நேரிட்டிருக்கின்றன.

நன்மருந்து பல சமயங்களில் பயனளிக்காமல் போய் விடுகின்றன. ஆனால், நஞ்சோ எப்பொழுதுமே உடனுக்குடன் பயன் அளிக்கிறது. இதை இறைவன் தன்பால் மக்களை திருப்புதற்குக் கையாளும் முறையாகக் கூறி நிறைவு காணும் நிலையே நீடிக்கின்றது. சித்த மருத்துவம் மந்திர ஆற்றல்களையும் இணைக்கப்பட்ட நிலையில்

உலகெங்கும் பரப்பப்படல் வேண்டும். அப்பொழுதுதான் உலக மக்கள் நோய்களைக் கண்டு அஞ்சிடுவதும், அருவெறுப்புக் கொள்வதும் முழுக்க அகன்றிடும். அப்பொழுது உலக மக்களை தேவையற்ற அச்சத்திலிருந்து காத்த ஈடு இணையற்ற புகழும் பெருமையும் உரிமையும் தமிழினத்தையே சார்ந்திடும். அப்பொன்னாள் எந்நாளோ?

**ஆசிரியர் குறிப்பு**:- இதனை எழுதிய ப.கிருட்டிணமூர்த்தி அவர்கள் எம்.ஏ. பட்டம் பெற்று, மத்திய அரசு உதவித்தொகையுடன் நான்கு ஆண்டுக் காலம் ஆய்வாளராக (U.G.C. Research Scholar) பணியாற்றியவராகும். இவரது ஆய்வின் முடிவு (Thesis) டாக்டர் பட்டம் (Ph.D.) பெறுவதற்கென வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளது. வங்காளத்தின் திரு. M.N.ராய் அவர்களின் 'உலக மத ஆய்வுக் குழு'வில் பல்லாண்டுகள் பணிபுரிந்த இவர்; மிக்க பொருட்செலவிட்டு, தக்க ஆய்வின் பயனாக தெய்வீக மருத்துவக் கலையில் தேர்ச்சி பெற்றவராவார். இவர் நமக்கு விடுத்த அஞ்சல் இங்குக் கட்டுரையாக உருப் பெறுகிறது. இவரது ஆய்வுக் கட்டுரைகள் இனி இடம் பெறும்.

*'முதல் சித்தன்' என்ற சித்த மருத்துவப் பத்திரிகையில் குருதேவர், பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் எழுதிய சிறு கட்டுரை வெளியிடப்பட்டதன் நகல்.*

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: பத்திரிகையில் அச்சிடப்பட்டதன் Xerox நகலாக இருந்தது.//**

# ஞானச்சாரியாரின் போதனைகள்

1. தாய்மொழியே பெய்யும் மழை!
2. தாய்நாடே உய்ய வைக்கும் தெய்வம்!
3. பெண்ணில்லா வாழ்வு கண்ணில்லா வாழ்வு!
4. மங்கையே உலகின் மங்கலம்!
5. மாதென்பவள் மாதந்தோறும் மலரும் மலர்!
6. யாதும் ஊரே யாவரும் கேளிர்!
7. நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்!
8. முன்னோர்களை ஆழ நினைத்து வழிபடலே வழிபாடு!
9. மூத்தோர்களை மதித்துப் பேணுதலே மத வாழ்வு!
10. மெய்ப்பொருள் காண்பது அறிவு!
11. எல்லோரிடத்தும் இனிய கனிமொழி பேசுவதே வேதம்!
12. கேடு செய்பவர்க்கும் நன்மை செய்வதே தவம்!
13. குருவழி வாழ்வே அனைத்தும் தரும்!
14. கட்டிய கோயில்கள் வெட்டிய அருள் ஊற்றுக்களே!
15. தமிழுணர்வே அருளுணர்வு!
16. தமிழறிவே அருளுலக அறிமுகம்!
17. குருவழியே சித்தியனைத்தும் தரும்!
18. தமிழின் பெருமையே தமிழர் பெருமை!
19. தமிழே இந்து மதம்!
20. தமிழ்ப் பற்றே தமிழின ஒற்றுமை!
21. தமிழின ஒற்றுமையே இந்து மதம் காக்கும்!

.......

**// "ஞானச்சாரியார் வரலாறு" என்னும் நூலில் உள்ள சில வாசகங்கள். //**

***"இந்துக்கள் கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்."***



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதிேனோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** (கி.பி.785 - 1040) ஏறத்தாழ இருநூற்று ஐம்பத்தாறு ஆண்டுகள் (256) வாழ்ந்திட்டார். இவருடைய போதனைகளில் சில:

***"தமிழ் மொழியின் வளவளர்ச்சியே தமிழினச் செழிச்சி!"; "தமிழின மொழி நாடு காக்கவே கோயில் பூசை!"; "தமிழே அன்பு தரும், தமிழே இன்பம் தரும், தமிழே அமைதி தரும், தமிழே பத்தி தரும், தமிழே சத்தி தரும், தமிழே சித்தி தரும், தமிழே முத்தி தரும்!"; "தமிழின உயிரே இந்து மதம்!".....***

இவருக்கு அடுத்து சுமார் 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.



**அம்மையப்பர்**

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org https://gurudevar.org
https://induism.org https://books.gurudevar.org

*Email:* indhuism@gmail.com